**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
***Ang Mo Kio Tamil Methodist Church***

***15th பிப்ரவரி / February 2025 ஞா யிறு ஆராதனை / Sunday Service***

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திரு. தாமஸ் பன்னீர் செல்வன்**<br>Mr. Thomas Panneer Selvan |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திரு. தாமஸ் பன்னீர் செல்வன்**<br>Mr. Thomas Panneer Selvan |
| ✝ **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**மா மாட்சி கர்த்தர் சாஷ்டாங்கம் செய்வோம்**

*1. மா மாட்சி கர்த்தர் சாஷ்டாங்கம் செய்வோம்,*
*வல்லவர் அன்பர் பாடி போற்றுவோம்*
*நம் கேடகம் காவல் அநாதியானோர்,*
*மகிமையில் வீற்று துதி அணிந்தோர்.*

*2. சர்வ வல்லமை தயை போற்றுவோம்,*
*ஒளி தரித்தோர் வானம் சூழ்ந்தோராம்;*
*குமுறும் மின் மேகம் கோப ரதமே,*
*கொடும் கொண்டல் காற்றிருள் சூழ் பாதையே.*

*3. மா நீச மண்ணோர் நாணல்போன்றோர் நாம்;*
*என்றும் கைவிடீர் உம்மை நம்புவோம்;*
*ஆ, உருக்க தயை! முற்றும் நிற்குமே,*
*மீட்பர் நண்பர் காவலர் சிருஷ்டிகரே.*

*4. ஆ, சர்வ சக்தி! சொல்லொண்ணா அன்பே!*
*மகிழ்வாய் விண்ணில் தூதர் போற்றவே*
*போற்றிடுவோம் தாழ்ந்தோர் நாம் அற்பம் என்றும்,*
*மெய் வணக்கமாய் துதி பாடலோடும்.*

| | |
|---|---|
| ✝ **மாறி வாசித்தல் 7ம் ஞாயிறு**<br>"சங்கீதம் 23" | **சபையார் இணைந்து**<br>Congregation |

"கர்த்தர் என் மேய்பராயிருக்கிறாா"

**Psalter Reading "Psalm 23"**

| | |
|---|---|
| ✝ **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord's Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| ✝ **காணிக்கை பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**தூயாதி தூயவரே**

**தூயாதி தூயவரே உமது புகழை நான் பாடுவேன்**
**பாரில் எனக்கு வேறென்ன 'வேண்டும்**
**உயிருள்ளவரை நின் புகழ் பாடவேண்டும்.**

*1. சீடரின் கால்களை கழுவினவர்*
*செந்நீரால் என்னுள்ளம் கழுவிடுமே.*

*2. பாரோரின் நோய்களை நீக்கினவர்*
*பாவி என் பாவநோய் நீக்கிடுமே.*

*3. துயரங்கள் பாரினில் அடைந்தவரே*
*துன்பங்கள் தாங்கிட பெலன் தாருமே.*

*4. பரலோகில் இடமுண்டு என்றவரே*
*பரிவாக எனக்கு மோரிடம் தாருமே.*

| | |
|---|---|
| ✝ **பூலோகத்தாரே யாவரும்**<br>Doxology | **சபையார் இணைந்து**<br>Congregation |
| ✝ **திருமறைப் பாடம்**<br>***லூக்கா 9 : 28 – 36***<br>Scripture Reading<br>Luke 9 : 28 – 36 | **மாஸ்டர். தியோபிலஸ்**<br>Master. Theophilus |
| **அருளுரை**<br>Sermon | **மறைதிரு. ஆர்.பிரபு**<br>Rev. R. Prabhu |
| ✝ **அர்ப்பணகீதம்**<br>Closing Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

## ***கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை***

***கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை***
***கண்கள் கலங்கிடுதே***
***கர்த்தா உம் பாடுகள் இப்போதும் நினைத்தால்***
***நெஞ்சம் நெகிழ்ந்திடுதே***

*1. கெத்சமனே பூங்காவிலே*
*கதறியழும் ஓசை*
*எத்திசையும் தொனிக்கின்றதே*
*எங்கள் மனம் திகைக்கின்றதே*
*கண்கள் கலங்கிடுதே!*

*2. சிலுவையில் அறைந்து வதைத்தனரோ*
*உம்மை செந்நிற மாக்கினரோ*
*அப்போதும் அவர்க்காய் வேண்டினீரோ*
*அன்போடு அவர்களைக் கண்டீரன்றோ*
*அப்பா உம் அன்பு பெரிதே!*

*3. என்னையும் உம்மைப்போல் மாற்றிடவோ*
*உம் ஜீவன் தந்தீரென் இயேசுவே*
*எந்தனைத் தரை மட்டும் தாழ்த்துகிறேன்*
*தந்துவிட்டேன் அன்புக் கரங்களிலே*
*ஏற்று என்றும் நடத்தும்!*

***அறிவிப்புகள்***
Announcements

✝ ***மனப்பாட வசனங்கள்*** — ***சபையார் இணைந்து***
Memory Verses — Congregation

***சங்கீதம் 6 : 4***
Psalm 6 : 4

***4. திரும்பும் கர்த்தாவே, என் ஆத்துமாவை விடுவியும்; உம்முடைய கிருபையினிமித்தம் என்னை இரட்சியும்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்***
Closing Prayer & Benediction

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** **/ Indicates Congregation standing**